

ஸ்ரீ :



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமத்யை கோதாயை நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:



# திருப்பாவை உபந்யாஸ ஆஹ்வாந பத்திரிகை

அஸ்மாத்ருசாம் அபக்ருதெள சிரதீக்ஷிதாம்
அஹ்நாய தேவி தயதே யதஸெள முகுந்த :
தந்நிச்சிதம் நியமிதஸ்தவமௌளிதாம்நா
தந்த்ரீ நிநாத மதுரைச்ச கிராம் நிகும்பை :

**"மாஸாநாம் மார்கஸீர்ஷோஹம்"** - மாதங்களில் மார்கழி மாதமாக நான் இருக்கிறேன் என்று கண்ணன் ஸ்ரீகீதையில் அருளினான். மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலைப் பொழுதாகும். ஆதலால் தேவாதிதேவனான கண்ணனை மார்கழி மாதம் முழுவதும் உஷ : காலத்தில் தூயோமாய் வந்து நாம் தூமலர்தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து உய்யுமாறு சாஸ்த்ரம் விதிக்கிறது. திருவாய்ப்பாடியில் ஆயர் சிறுமியர்கள் பாவைநோன்பு நோற்று கண்ணனைப் பெற்றார்கள். ஸ்ரீ பூமிப்பிராட்டியின் அவதாரமான ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையாகிற சங்கத் தமிழ்மாலையைப் பாடி திருவரங்கனைப் பெற்றாள். மேலும் இத்திருப்பாவையைப் பாடினால் **"எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்"** என்றும் அநுக்ரஹித்தருளினார். ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்ரீஸ்வாமி தேசிகனும் இதை **"தந்த்ரீநிநாத மதுரைச்ச கிராம் நிகும்பை"** என்று நமக்குக் காட்டி அருளினார்.

இப்படி கலெள வேங்கடநாயக : என்கிற ஸ்ரீநிவாஸன் தொடக்கமாக சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான கோதா (ஆண்டாள்) சீரார் தூப்புல் திருவேங்கடமுடையானான ஸ்ரீஸ்வாமி தேசிகன் வழியாகப் பெருகிவரும் ஸ்ரீநிவாஸ தயாம்போதி பரீவாஹபரம்பரையை ஸ்ரீநிவாஸனுடைய தயா ப்ரவாஹத்தைப் பெற்று இன்புற **"நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை"** ஸ்ரீவேதாந்த தேசிகன் ஸந்நிதியில் மேலையார் செய்தபடியாய் - மஹான்கள் ஏற்படுத்திய படிக்கு நாளது ஸார்வரி வருஷம், கார்த்திகை மாதம் 30ம் தேதி (15-12-2020) முதல் மார்கழி மாதம் முழுவதும் மாலை 6.15 மணி முதல் 7.30 மணி வரை உபந்யாஸம் நடைபெறும்.

ஸ்ரீ ஆண்டாளின் நன்மக்கள் அனைவரும் சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே கேட்டு எங்கும் திருவருள் பெற்று இன்புற வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

தாஸன்கள் :

**வேதபாராயண சபா**

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,

மயிலாப்பூர்

ஸார்வரி வருஷம் (2020-21) - மார்கழி மாதம் - திருப்பாவை உபந்யாஸம்

| வரிசை எண் | பொருளடக்கம் | உபந்யாஸம் அருளும் ஸ்வாமிகள் | உபந்யாஸ தேதி |
|---|---|---|---|
| 1 | அவதாரிகை<br>பாசுரம் 1 | வித்வான் வில்லிவலம்<br>ஸ்ரீ உ.வே. P.K. லக்ஷ்மி நரசிம்ஹாச்சாரியார்<br>(ஆஸ்தான வித்வான் & ஆராதகர்<br>ஸ்ரீமதஹோபிலமடம்) | 15th December 2020 |
| 2 | பாசுரங்கள்<br>2 to 4 | கோழியாலம் ஸ்ரீ உ.வே. பரத் ஸ்வாமி | 16th - 18th<br>December 2020 |
| 3 | பாசுரங்கள்<br>5 to 7 | திருவஹீந்திரபுரம்<br>ஸ்ரீ உ.வே. T.E. மாலோலக்கண்ணன் ஸ்வாமி | 19th - 21st<br>December 2020 |
| 4 | பாசுரங்கள்<br>8 to 10 | இசையனூர்<br>ஸ்ரீ உ.வே. வரதகோபாலாச்சாரியார் | 22nd - 24th<br>December 2020 |
| 5 | பாசுரங்கள்<br>11 to 13 | திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம்<br>ஸ்ரீ உ.வே. S. ரங்கநாத தாத்தாச்சாரியார் | 25th - 27th<br>December 2020 |
| 6 | பாசுரங்கள்<br>14 to 16 | அழிசூர் ஸ்ரீ உ.வே. ஸுதர்சனாச்சாரியார் | 28th - 30th<br>December 2020 |
| 7 | பாசுரங்கள்<br>17 to 19 | "பால வேதாந்த பாஸ்கர"<br>அளத்துரை ஸ்ரீ உ.வே. Dr. ஸ்ரீராம் ஜகந்நாதாச்சாரியார்<br>(சிஷ்யர் - ஸ்ரீ உ.வே. Dr. S. பத்மநாபாச்சாரியார் -<br>ஸ்ரீகார்யம் - ஸ்ரீமதஹோபிலமடம்) | 31st December 2020<br>2nd January 2021 |
| 8 | பாசுரங்கள்<br>20 to 23 | கோழியாலம் ஸ்ரீ உ.வே. Dr. K. தயாநிதி ஸ்வாமி<br>(உதவிப் பேராசிரியர் - வைணவத்துறை HOD i/c -<br>சென்னை பல்கலைக்கழகம்) | 3rd - 6th<br>January 2021 |
| 9 | பாசுரங்கள்<br>24 to 26 | இசையனூர்<br>ஸ்ரீ உ.வே. சேஷகோபாலாச்சாரியார் | 7th - 9th<br>January 2021 |
| 10 | பாசுரங்கள்<br>27 to 29 | ஸ்ரீபெரும்புதூர் தட்டை<br>ஸ்ரீ உ.வே. N. ஸத்யநாராயணாச்சாரியார் | 10th - 12th<br>January 2021 |
| 11 | பாசுரம் 30<br>&<br>ஸ்ரீ ஆண்டாள்<br>திருக்கல்யாணம் | திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம்<br>ஸ்ரீ உ.வே. S. ரங்கநாத தாத்தாச்சாரியார் | 13th January 2021 |

கீழ்கண்ட ஸ்வாமிகள் திருப்பாவை உபந்யாஸம் செய்தருளுகிறார்கள்